# செம்மொழி இலக்கியங்களில் பல்துறை அறிவியல் சிந்தனைகள்

## பயிலரங்க அறிக்கை

2018 ஆம் ஆண்டு பிப்ரவரி   1 முதல் பிப்ரவரி 10 வரை


**ஒருங்கிணைப்பாளர்**

**முனைவர் மு.பழனியப்பன்**

தமிழ்த்துறைத்தலைவர்,அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

திருவாடானை


**நிகழிடம்**

**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை, 623407**

**இராமநாதபுர மாவட்டம்**


செம்மொழி இலக்கியங்களில் பல்துறை அறிவியல் சிந்தனைகள்

பயிலரங்க அறிக்கை

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையின் கீழ் திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் முதல் 10 முதல் நாள் வரை நடைபெற்றது. இப்பத்து நாள்களும் காலை 9.15 முதல் 5.15 வரை தொடர்ந்து அறிஞர்கள் பயிலரங்க உரையாற்றினர். இதில் முனைவர் பட்ட ஆய்வாளர்களும், இளங்கலை மூன்றாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு மாணவர்களும் பயிற்சி பெற்றனர். இவர்களுக்கு மதிய உணவு, தேநீர், சிற்றுணவு, குறிப்பேடு, எழுதுகோல் ஆகியன வழங்கப்பெற்றன.

**<u>முதல் நாள் தொடக்கவிழா (1.2.2018)</u>**

1.2.2018 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் ”செம்மொழி இலக்கியங்களில் பல்துறை அறிவியல் சிந்தனைகள்” என்ற தலைப்பிலான பயிலரங்கின் தொடக்கவிழா நடைபெற்றது. இவ்விழாவின் வரவேற்புரையைப் பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு.பழனியப்பன் அவர்கள் ஆற்றினார். இவ்விழாவில் கல்லூரியின் முதல்வர் முனைவர் மோ.கி. ராஜ்குமார் அவர்கள் ஆற்றினார். இதில் மாணவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்ற வேண்டிய பணிகள் பற்றிப் பேசினார். இவ்விழாவில் திருவாடானை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. எஸ். ராம்குமார் வாழ்த்துரை வழங்கினார். அழகப்பா பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு.பாண்டி அவர்கள் ‘‘அறிவியலும் தமிழும் என்ற தலைப்பில் உரை வழங்கினார். இதில் அவர் தமிழர்களின் பல் துறை அறிவியல் அறிவுத் திறன் பற்றி எடுத்துரைத்தார்.

**<u>பயிலரங்க அமர்வுகள்</u>**

தொடக்கவிழாவைத் தொடர்ந்து கோயம்புத்தூர் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத்தலைவர் திரு. க. முருகேசன் அவர்கள் தனி மனித உளவியல் என்ற தலைப்பில் பயிலரங்க உரையாற்றினார்.

அடுத்த அமர்வு பிற்பகல் தொடங்கியது. இதில் தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கலைக்கல்லூரியின் முதல்வர் திரு. ர. சந்திரமோகன் அவர்கள் நுண்அறிவியல் என்ற பொருளில் பயிலரங்க உரையாற்றினார். காட்சி வழிப்படமாக அமைந்த இவ்வுரையில் மாணவர்கள் நுண்அறிவியல் செய்திகளை அறிந்து கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து மேற்படி கல்லூரியில் தமிழ்த்துறை விரிவுரையாளராக விளங்கும் திரு. கரு. முருகன் அவர்கள் எதிர்காலவியல் சிந்தனைகள் பற்றிய கருத்துகளை வழங்கினார்.

இதனுடன் முதல் நாள் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

**<u>2.2.2018 வெள்ளிக்கிழமை, இரண்டாம்நாள்</u>**

பறம்புமலை பற்றிய செய்திகளைத் தொகுத்து அளிப்பத்தாக முதல் அமர்வின் பேச்சு இன்று அமைந்தது. இதனைப் பொம்மையார் பாளையம் சித்தர் சிவஞானி கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர் பேரா சொ. அருணன் காட்சிப் பட விளக்கமாக வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு இராமநாதபுரம் கண் மருத்துவர், தமிழ்ச்சங்கப் புரவலர் திரு சந்திரசேகரன் வந்திருந்தார்.

இதனைத்தொடர்ந்து ''கட்டடவியல்'' என்ற தலைப்பில் யாழ்.சு. சந்திரா அவர்கள் பயிற்சியுரை வழங்கினார். தமிழர்தம் கட்டட அறிவியல் துறை பற்றிய செய்திகளை அவர் தொகுத்து வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து மதிய அமர்வு நடைபெற்றது. இதில் வன அலுவலர் அ.அரவரசன் அவர்கள் வனவியல் பற்றிய செய்திகளை வழங்கினார். இதில் அவர் வனவியல் பாதுகாக்கும் முறைகள் பற்றி அறிவித்தார். வேம்புப் பயிர் செய்வதன் வாயிலாக உலகைப் பசுமை உலகமாக மாற்றலாம் என்றார் அவர்.

இவரைத் தொடர்ந்து அயல் நாட்டுத்தொடர்பு என்ற தலைப்பில் திரு ஈழம் மலர் மன்னன் கருத்துரை வழங்கினார். இவ்விரு அமர்வுகளிலும் மாணவர்கள் நிறைய கலந்துரையாடினர்.

**<u>3.2.2018, சனிக்கிழமை, மூன்றாம்நாள்</u>**

இன்று காலை ஒன்பது மணிக்கு திருப்புல்லாணி தொன்மவியல் மையத்தின் இயக்குநர், ஆங்கில ஆசிரியர் திரு. வே. இராஜகுரு அவர்கள் தொன்மவியல் பற்றிய செய்திகளைக் காட்சிப்படம், குறும்படம் ஆகியவற்றைக்கொண்டு விளக்கினார் .பயிற்சியாளர்களிடம் இது பெருத்த வரவேற்பைப் பெற்றது. இந்நிகழ்ச்சி மூன்றுமணி நேர அளவில் நடைபெற்றது. இரண்டு பயிரலங்க வேளையாக இது நடைபெற்றது.

தொடர்ந்து பேரா வேல். கார்த்திகேயன் அவர்கள் நீரியல் என்ற தலைப்பில் தமிழர் தம் நீரியல் அறிவு குறித்தான செய்திகளை வழங்கினார். இவர் தமிழர்தம் நீரியல் அறிவு மேம்பாடு குறித்துக் கருத்துரை வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து முனைவர் சொ. சேதுபதி அவர்கள் சூழலியல் பற்றிய செய்திகளை எடுத்துரைத்துத் தமிழர் தம் சுற்றுச் சூழல் பேணலைச் செவ்விலக்கியங்கள் வழியாக எடுத்துரைத்தார்.

## 4.2.2018, ஞாயிற்றுக்கிழமை, நான்காம்நாள்

மத்திய அரசின் வானிலை மைய அறிவியல் விஞ்ஞானி திரு. கே.வி. பாலசுப்பிரமணின் அவர்கள் செவ்வியல் இலக்கியத்தில் வானிலையியல் செய்திகள் இருந்தமையைக் காட்டி அவற்றை எவ்வாறு சமுதாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்வது என்பது பற்றி உரையாற்றினார். இவரின் உரையும் காட்சிப் பட உரையாக அமைந்தது.

இவரைத்தொடர்ந்து, சென்னை ஊடகவியலாளர் திரு ஆ. கிருஷ்ணன் அவர்கள் காட்சி அறிவியல் துறை பற்றி விளக்கம் தந்து செம்மொழி இலக்கியங்களில் அது எவ்வாறு காட்டப்பெற்றுள்ளது என்பதையும் காட்டினார்.

பிற்பகல் அமர்வில் தஞ்சாவூர், மன்னர் சரபோசி அரசு கலைக்கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் திரு. து. ரோசி அவர்கள் பறவைகள் என்ற தலைப்பில் உரை வழங்கினார். இதனைத் தொடர்ந்து திரு. ரா. வரதராஜா அவர்கள் தாவரங்கள் என்ற தலைப்பில் உரை வழங்கினார். இவரைத் தொடர்ந்து பேரா. மதுரை சந்திரன் அவர்கள் உழவு என்ற தலைப்பில் நாட்டுப்புற இசையுடன் பயிலரங்க உரை வழங்கினார். மாணவர்களிடம் இந்நிகழ்வு பெரிதும் வரவேற்பினைப் பெற்றது.

## 5.2.2018, திங்கள் கிழமை, ஐந்தாம் நாள்

இன்று காலை முதல் அமர்வில் திரு் கரு. நா. மணிமாறன் அவர்கள் செம்மொழி இலக்கியங்களில் மக்கள் தகவல் தொடர்பியல் என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். அவர் தற்கால நிலையில் தகவல் தொடர்பியலின் வலிமையையும், முற்கால நிலையில் அதன் நிலையையும் ஒப்பிட்டுப் பேசினார்.

இதனைத் தொடர்ந்து திரு, க. இளையராஜா அவர்கள் திருக்குறளில் மேலாண்மையியல் என்ற தலைப்பில் உரைவழங்கினார். இந்நிகழ்வைத் தொடர்ந்து தொண்டி அழகப்பா பல்கலைக்கழக மாலை நேரக்கல்லூரியின் இயக்குநர் திரு. கா. பாஸ்கரன் அவர்கள் கடலியல் என்ற தலைப்பில் உரை வழங்கினார். இவரைத் தொடர்ந்து கடல் சார் உயிரியல் என்ற தலைப்பில் அழகப்பா பல்கலைக்கழக கடலியல் துறைப் பேராசிரியர் திரு.சு. இரவிக்குமார் பயிலரங்க உரை வழங்கினார். இதனைத் தொடர்ந்து உயிர்த்தோற்றம் என்ற தலைப்பில் மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க்கல்லூரியின் முன்னை முதல்வர் முனைவர் பழ. முத்தப்பன் அவர்கள் உரை வழங்கினார்.

## 6.2.2018, செவ்வாய்க்கிழமை, ஆறாம்நாள்

இன்று நடைபெற்ற முதல் அமர்வில் கோவிலூர் ஆதீன கலைக்கல்லூரியின் முன்னை முதல்வர், இன்னாள் கல்வி ஆலோசகர் திரு சே. குமரப்பன் அவர்கள் உயிரியல் என்ற தலைப்பில் உரை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து திருவாடானை அரசு கலைக் கல்லூரியின் கணினி அறிவியல் துறைத்தலைவர் பேரா. து.சுந்தர் ‘‘தமிழும் கணித்தலும்” என்ற தலைப்பிலும், காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் திருமிகு பெ.வித்யா அவர்கள் மனையியல் என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

மதிய அமர்வில் திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆங்கிலத்துறைத்தலைவர் திருமதி ப. மணிமேகலை அவர்கள் உளவியல் என்ற தலைப்பிலும், இக்கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர் திருமிகு க. சத்யா அவர்கள் உடற் கூறு அறிவியல் என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

இந்நாளின் நிறைவு நிகழ்வில் தமிழாசிரியர் திரு. வே. எட்வின்ராஜா அவர்கள் போரியல் என்ற தலைப்பிலும், சேவுகன் அண்ணாமலை கல்லூரியின் பெருந்திட்ட உதவியாளர் திரு சு. முருகேசன் பகுத்தறிவு என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

## 7.2.2018, புதன் கிழமை, ஏழாம் நாள்

இன்று காலை காரைக்குடி மத்திய மின்வேதியல் கழக அறிவியல் அறிஞர் திரு. மீ. நோயல் என்பவர் செவ்வியல் இலக்கியங்களில் வேதியியல் சிந்தனைகள் என்ற தலைப்பில் உரை வழங்கினார்.

இவரைத் தொடர்ந்து திருச்சி பெரியார் ஈ.வெ.ரா கல்லூரியின் உதவிப் பேராசிரியர் திருமதி ந. பிரியா அவர்கள் உணவியல் என்ற தலைப்பில் உரையாற்றினார். இதில் பண்டைய தமிழரின் உணவுநடைமுறை பற்றி மாணவர்கள் அறிந்துகொண்டனர். பண்டைய உணவு முறையைத் தற்காலத்தில் செய்து உண்ணவும் மாணவர்கள் தலைப்படும் நிலையில் இவ்வுரைஅமைந்தது.

பிற்பகல் நிகழ்வில் கடல் பயணம் பற்றிய காட்சி உரை வழங்கப்பட்டது. சென்னையில் இருந்துகொண்டு அமெரிக்க நிறுவனத்தில் பணியாற்றும் கப்பல் பொறியாளர் திரு. சுப. இராமநாதன் அவர்கள் தன் கடல் பயண அனுபவங்களுடன் பண்டைத்தமிழரின் கடல் பயண அறிவுத்திறனையும் இணைத்துப் பேசினார். சிறு சிறு படக்காட்சிகளும் வழங்கப்பட்டன.

இவரைத் தொடர்ந்து காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. க. சொல்லேர் உழவன் அவர்கள் வேளாண்மை என்ற தலைப்பில் உரை வழங்கினார்.

<u>8.2.2018, வியாழன், எட்டாம் நாள்</u>

இன்று காலை முதல் அமர்வில் திருவாடானை அரசு கலை மறறும் அறிவியல் கல்லூரியினி தமிழ்த்துறைப் பேராசிரியர் க. கார்த்திகா அவர்கள் கார் பருவம் என்ற தலைப்பில் உரை வழங்கினார்.

இவரைத்தொடர்ந்து திருவாடானை அரசு மேல்நிலைப்பள்ளியின் இயற்பியல் துறை ஆசிரியர் திரு கி. கிருஷ்ணகுமார் அவர்கள் செம்மொழி இலக்கியங்களில் இயற்பியல் செய்திகள் இடம்பெற்றுள்ள தன்மையை எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆங்கிலத் துறைப் பேராசிரியர் திரு. ஈ. சுரேஷ் அவர்கள் சமுகவியல் பற்றிய செய்திகளை வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து பிற்பகல் நடைபெற்ற பொழிவில் காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் திரு. இரா. குமார் அவர்கள் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பில் உரை வழங்கினார்.

இவரைத்தொடர்ந்து காரைக்குடி வித்யாகிரி பள்ளியின் தமிழாசிரியர் திரு. மெ. செயம் கொண்டான் அவர்கள் மண்ணியல் பற்றிய செய்திகளைப் பகிர்ந்துகொண்டார்.

<u>9.2.2018, வெள்ளிக்கிழமை, ஒன்பதாம் நாள்</u>

இன்று முற்பகல் நிகழ்வில் சென்னை, தாம்பரம் கிறித்துவ கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. சு. சதாசிவம் அவர்கள் எந்திரவியல் என்ற தலைப்பில் உரை வழங்கினார்.

அடுத்த நிகழ்வில் விருதுநகரில் சித்த மருத்துவராகப் பணியாற்றும் திரு வி.என். பரிமளச் செல்வன் அவர்கள் தமிழ் மருத்துவம் என்ற தலைப்பில் உரை வழங்கினார். மேலும் மாணவர்களின் உடல் நலம் குறித்த கேள்விகள், சந்தேகங்கள் ஆகியவற்றிற்குத் தீர்வு சொன்னார்.

இதனைத்தெர்டர்ந்து திருவாடானை அரசு கலை அறிவியல் கல்லூரியின் ஆங்கிலத் துறை விரிவுரையாளர் திரு ஆர் .சரவணன் அவர்கள் திருக்குறளில் அறிவியல் என்ற தலைப்பில் உரை வழங்கினார். இவரைத் தொடர்ந்து சென்னை இராணி மேரி கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர் கே.இரா. கமலா முருகன் அவர்கள் விலங்கியல் என்ற தலைப்பில் உரை வழங்கினார். இடைஇடையே பாடி இவர் மாணவர்களை உற்சாகப்படுத்தினார்.

<u>10.2.2018, சனிக்கிழமை, பத்தாம் நாள்</u>

இன்று சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கல்லூரயின் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் ஆ. பாண்டி அவர்கள் குறிஞ்சி நிலத் தாவரங்கள் என்ற தலைப்பில், மருத்துவ அறிவியல் என்ற தலைப்பில் கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. ஆ.ஜோசப் சார்லி ஆதாஸ் உரை வழங்கினார்.

<u>நிறைவு விழா</u>

பத்துநாள் தொடர்ந்து நடைபெற்ற இப்பயிலரங்கின் நிறைவுவிழா, 10.2.2018 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. இவ்விழாவிற்குத் திருவாடானை அரசு கல்லூரியின் முதல்வர் திரு. மோ.கி. ராஜ்குமார் தலைமை வகித்தார். இவ்விழாவிற்கு முனைவர் மு.பழனிப்பன் வரவேற்புரை வழங்கினார்.

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் செம்மொழித் தமிழின் பெருமைகளை மாணவர்கள் காக்க வேண்டும் என்றும் அறிவியல் உலகம் தமிழர்க்கு புதிதல்ல என்றும் உரை வழங்கினார்.

இதன்பின் பயிலரங்கில் கலந்து கொண்டு பயிற்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. அவர்களுக்கு நூல்களும் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் செல்வி பிரதிபா, செல்வி இரமாமணி, செல்வி சுபத்ரா ஆகியோர் பயிலரங்கத்தின் திறனை ஆய்வு செய்து உரை வழங்கினர். இவர்கள் இதுபோன்ற பயிலரங்குகள்

மணாவர்தம் திறமையை வளரப்பன என்றும் இதன்வழி தங்களின் பல்துறை வளம் பெற்றது என்றும் திறனுரை வழங்கினர்.

இப்பயிலரங்கின் நன்றியுரையை திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கணிதவியல் துறைத் தலைவர் திரு. ச . செல்வம் வழங்கினார். நாட்டுப்பண்ணுடன் பயிலரங்கம் சிறப்புடன் நிறைவு பெற்றது.